# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
## FIRST YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2006 / 2007
## HELD IN MAY - 2007

## TML 1.21 – INTRODUCTION TO TAMIL LANGUAGE AND FUNCTIONAL GRAMMAR

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி – I

01. "தமிழ் மொழியானது நவீன உலகத் தேவைகளுக்கேற்ப வளர்ந்து வரும் ஒரு மொழியாகும்." - அலசுக.

02. (அ) எழுத்து மொழிக்கும் பேச்சு மொழிக்குமிடையிலான வேறுபாடு குறித்துக் கருத்துரைக்குக.

    (ஆ) பேச்சு மொழி பல்வேறு வகையாக வேறுபடுவதற்கான அடிப்படைக் காரணிகளை விபரிக்குக.

03. தமிழ்மொழி வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு அடிப்படையாக அமைகின்ற சான்றுகளை விளக்குக.

### பகுதி – II

04. நன்னூல் கூறும் சொல்லின் முதல், கடை நிலை எழுத்துக்களை குறிப்பிட்டு, தற்காலத் தமிழில் அவை எவ்வாறு வழங்குகின்றன என உதாரணங்களுடன் எடுத்துரைக்குக.

05. தற்காலத் தமிழில் உயிரீற்றுப் புணர்ச்சியின்போது வல்லின மெய்கள் மிகும், மிகா இடங்கள் பற்றி ஆராய்க.

06. தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் ஆகியவற்றின்

    (i) அமைப்பு
    (ii) அவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகள்
    (iii) அவற்றின் பயன்பாடு

    என்பவற்றை விளக்குக.

07. வினைச் சொற்களின் தனித்துவமான பண்புகளைத் தந்து, அவற்றின் வகைகளைச் சுருக்கமாக விளக்குக.

08. இடைச்சொல் என்றால் என்ன? உம், ஓ, தான், ஆவது. மட்டும் ஆகிய இடைச்சொற்கள் எந்தெந்தப் பொருள்களில் வழங்குகின்றன என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.

***